# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081692

1. District : கன்னியாகுமரி மாவட்டம் | PS: காவல்நிலையம் V&AC Nagercoil | Year: 2021 ஆண்டு | FIR No.9/2021 மு.த.அ. எண் | Date 15.11.2021 நாள்

2. (i) Act சட்டம்: IPC — Sections பிரிவுகள்: 120-B, 167, 466, 467, 477A, 409 r/w 34 IPC
(ii) Act சட்டம்: The P.C Act 1988 as amended by Act 16/2018. — Sections பிரிவுகள்: 13(2) r/w 13 (1) (a) of the P.C Act 1988 as amended by Act 16/2018.
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : June 2019 நாள் முதல் | Date to : February 2020 நாள் வரை
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.11.2021 | Time நேரம் :14.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 15.11.2021 | Time நேரம் :14.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — 25 கி.மீ மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகம், மாற்தாண்டம் @ கோழிபோர்விளை.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T.T.ரெமா | (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர் திரு.றஸ்டின் தாமஸ்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1976 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் | (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கன்னியாகுமரி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. திருமதி.G..செல்வி, கணக்கர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மாற்தாண்டம் @ கோழிபோர்விளை, கன்னியாகுமரி மாவட்டம்.
2. திரு.K.பழனிசாமி, வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், மாற்தாண்டம் @ கோழிபோர்விளை, கன்னியாகுமரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

இல்லை

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>எதிரிகள்</u>:

1.திருமதி.G.செல்வி,
கணக்கர்,
வட்டார போக்குவரத்து அலுவலகம்
மார்த்தாண்டம்
இருப்பு கோழிபோர்விளை,
கன்னியாகுமரி மாவட்டம்.

2.திரு.K.பழனிசாமி,
வட்டார போக்குவரத்து அலுவலர்,
வட்டார போக்குவரத்து அலுவலகம்,
மார்த்தாண்டம்
இருப்பு கோழிபோர்விளை,
கன்னியாகுமரி மாவட்டம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>:- இன்று 15.11.2021-ம் தேதி காலை 14.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் T.T.ரெமா ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது, சென்னை-16, ஆலந்தூர், M.K.N சாலை, எண்.293, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இயக்குநர் அலுவலக உத்தரவு V.R.No.17911/2020/TPT/KK நாள்.25.10.2021-படி, மார்ஜினில் கண்ட எதிரிகள் 1.திருமதி.G.செல்வி மற்றும் 2.திரு.K.பழனிசாமி ஆகியோர்கள் மீது கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 09/2021 சட்ட பிரிவுகள் 120-B, 167, 466, 467, 477-A, 409 r/w 34 IPC மற்றும் 13(2) உ/இ 13 (1) ( a ) of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16/2018 -ன் படி வழக்கு பதிவு செய்தேன். வழக்கின் விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் திரு.S.பீட்டர் பால் துரை. பதவி துணை கண்காணிப்பாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
V&AC, Nagercoil

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15.11.2021
14.30 hrs

Name: பெயர் T.T.ரெமா
Rank: நிலை காவல் ஆய்வாளர், ஊ.த.க பிரிவு, கன்னியாகுமரி மாவட்டம் No. எண் ..........

முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி........

குற்ற அலுவலர்-1 திருமதி.G.செல்வி, மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 01.06.2018-ம் தேதி முதல் 31.10.2020-ம் தேதி முடிய கணக்கராக பணிபுரிந்துள்ளார். அப்போது அ-4 பிரிவு பணிகளை கூடுதலாக கவனித்துள்ளார். அவர் தற்போது தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். குற்ற அலுவலர்-1 திருமதி.G.செல்வி, மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்த போது, கணக்கர் பணி, புதிய வாகன பதிவு மற்றும் அது தொடர்பான விபரங்களை கணினியில் பதிவேற்றம் செய்வது, புதிய வாகனங்கள் சம்மந்தமாக அரசுக்கு செலுத்தவேண்டிய அனைத்து வித வரித் தொகைகளையும் கணக்கீடு செய்து, அரசாங்க கணக்கில் செலுத்த நடவடிக்கை மேற்கொள்வது, வாகனங்களின் நிரந்தர பதிவு, மறு பதிவு, பிற மாநில வாகனங்களுக்கு NOC வழங்குதல் தொடர்பான பணிகள், நடப்பு 'பி' பதிவேடு தொடர்பான பணிகள், செலவினம், வரவினம், ஒத்திசைவு தொடர்பான பணிகள் ஆகியவை அவரின் முதன்மையான பணிகளாகும். குற்ற அலுவலர்-2 திரு.K.பழனிசாமி, மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக 25.10.2017முதல் 05.03.2020-ம் தேதி முடிய பணிபுரிந்துள்ளார். தற்போது பெரம்பலூர் மாவட்ட வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வருகிறார். மோட்டார் வாகன சட்டம் 1988-ன் படி, வட்டார போக்குவரத்து அலுவலர் தனது அதிகார எல்கைக்குள் ஓட்டுநர் உரிமம், நடத்துநர் உரிமம் வழங்கும் அதிகாரம், வாகன அனுமதி (Permit) வழங்கும் அதிகாரம் மற்றும் வாகன பதிவுகள் செய்ய அதிகாரம் (Licensing Authority & Registering Authority) உடையவர் ஆவார். மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் மூலம் நடைபெறும் பணிகளான ஓட்டுநர் உரிமம் வழங்குதல், பழகுநர் உரிமம் வழங்குதல், புதிய வாகனம் பதிவு செய்தல், வாகன பெயர் மாற்றம் செய்தல், FC மற்றும் Permit வழங்குதல் போன்ற அனைத்துப் பணிகளுக்கும் பொறுப்புடையவர் ஆவார். மேலும் 2019-2020-ம் ஆண்டுகளில் இவர் மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனப் பதிவிற்கு வந்த அனைத்து வாகனங்களையும் பார்வையிட்டு வாகனத்திற்குரிய பதிவெண் வழங்கி ஒப்புதல் வழங்கி உள்ளார். மேற்படி 1-ம், 2-ம் குற்ற அலுவலர்கள் ஊழல் தடுப்புச் சட்டம் 1988 பிரிவு 2 (c) படி பொது ஊழியர்கள் ஆவார்கள். வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஒரு நான்கு சக்கர வாகனம் பதிவு செய்யப்படும் போது, அந்த வாகனத்தின் விலைப்பட்டியலின் படி (Ex-Showroom Price)

ஆயுள் வரி வசூலிக்கப்படும். வாகனத்தின் விலை 10 லட்சத்திற்கு அதிகமாக இருந்தால், அந்த விலையில் 15%-மும், வாகனத்தின் விலை 10 லட்சத்திற்கு குறைவாக இருந்தால், அந்த விலையில் 10%-மும், ஆயுள் வரியாக அரசு கணக்கில் செலுத்தப்பட வேண்டும். மாவட்டத்திற்குள் வாங்கப்படும் வாகனங்களின் விலைப்பட்டியலை வாகன ஷோரும் டீலரே கணினியில் பதிவேற்றம் செய்துவிடுவார். ஆனால் வெளிமாநிலம்/ வெளிமாவட்டங்களிலில் தற்காலிக பதிவு செய்யப்பட்டு, நிரந்தர பதிவிற்கு வரும் வாகனத்தின் விலைப்பட்டியலை, கணினியில் சம்மந்தப்பட்ட பதிவு பிரிவு கிளார்க் தான் பதிவேற்றம் செய்வார். வாகனத்தின் விலைப்பட்டியலை கணினியில் பதிவேற்றம் செய்தால், கணினியே தானாக ஆயுள் வரியை கணக்கீடு செய்யும். ஆனால் கணினியில் வாகனத்தின் அசல் விலையை குறைத்து பதிவேற்றம் செய்தால், கணினி ஆயுள் வரியை குறைவாக கணக்கீடு செய்யும். இந்த பணியை சம்மந்தப்பட்ட பதிவு பிரிவு கிளார்க் மட்டுமே செய்ய இயலும். இதன்படி செய்யப்படும் முறைகேட்டை, வாகனத்தை பார்த்து, ஆவணங்களை பரிசீலனை செய்து ஒப்புதல் (Verify & Approval) வழங்கும் அதிகாரியால் மட்டுமே கண்டுபிடிக்க முடியும். இருவரும் கூட்டாக சேர்ந்தால் வாகனத்தில் விலையை குறைவாக காண்பித்து ஆயுள் வரியை குறைக்க முடியும். இவ்வாறு விலைப்பட்டியல்களில் (Invoice) திருத்தங்கள் செய்து, தவறான ஆவணங்களை உருவாக்கி, குற்ற அலுவலர்-1-ஆல் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட தவறான பதிவுகளுக்கு, குற்ற அலுவலர்-2 உடந்தையாக இருந்து, தெரிந்தே ஒப்புதல் வழங்கியுள்ளார். குற்ற அலுவலர்களில், மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கணக்கராகவும், அ-4 பிரிவு கிளார்க்காகவும் பணிபுரிந்த, குற்ற அலுவலர்-1 திருமதி.G.செல்வி மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்த குற்ற அலுவலர்-2 திரு.K.பழனிசாமி ஆகியோர்கள், கூட்டாக சேர்ந்து, அரசுக்கு சேர வேண்டிய சட்டப்பூர்வமான வருமானத்தை, கையாடல் செய்யவேண்டும் என்ற பொதுவான குற்ற நோக்கத்துடன், சதி ஆலோசனையில் பங்கேற்று, 2019-2020–ம் ஆண்டுகளில் வெளிமாநிலம்/ வெளிமாவட்டங்களில் தற்காலிக பதிவு செய்து விட்டு, மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நிரந்தர பதிவு செய்யப்பட்ட, கீழ்குறிப்பிடும் அட்டவணையில் உள்ள 11 நான்கு சக்கர வாகனங்களுக்கு, வாகன உரிமையாளர்களிடமிருந்து, மேற்படி 11 வாகனங்களின் அசல் விலைப்பட்டியலின் படி, (Actual Invoice) ஆயுள் வரி (Life Tax) வசூல் செய்துவிட்டு, பின்னர் அந்த வாகனங்களின் விலை பட்டியல்களில் (Invoice) திருத்தங்கள் செய்து, தவறான ஆவணங்களை உருவாக்கி, வாகனத்தின் திருத்தப்பட்ட விலையை, கணினியில் குறைத்து பதிவேற்றம் செய்து, அதன் மூலம் குறைத்து காண்பித்து, குறைத்து காண்பித்த தொகைக்கு மட்டும் ஆயுள் வரி வசூல் செய்ததாக பதிவுகள் காண்பித்து விட்டு,

வசூலிக்கப்பட்ட மீதமுள்ள தொகை **Rs.8,88,719/-ஐ**, குற்ற அலுவலர்கள் ஆளுகைக்குட்பட்ட பொறுப்பில் இருந்த நிலையில், அதற்குரிய நடைமுறைப்படி, அரசின் வங்கி கணக்கில் இருசால் செய்யாமல், தவறான குற்ற நடத்தையில் ஈடுபட்டு, பரஸ்பரம் தங்களுடைய சொந்த பயன்பாட்டிற்கு அரசு பணத்தைக் கையாடல் செய்துள்ளார்கள்.

| S.N | Vehicle Owner | Vehicle Name | Regis. No. | Actual Rate in Rs. | Actual Tax in Rs. | Paid Tax in Rs. | Misappropriated amount in Rs. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | S.Gladwin Oliver | SKODA Rapid | TN75AL0500 | 12,99,599 | 1,94,940 | 78,000 | 1,16,940 |
| 2 | K.S.Sindhya | INNOVA Crysta | TN75AL4720 | 19,27,000 | 2,89,050 | 20,000 | 2,69,050 |
| 3 | E.Husper John | MARUTI SUZUKI Ertiga | TN75AL5596 | 9,87,548 | 98,755 | 20,000 | 78,755 |
| 4 | Renuga Thangam | MARUTI SUZUKI Dzire ZXI | TN75AL1217 | 7,51,948 | 75,195 | 20,000 | 55,195 |
| 5 | G.Shibu | MARUTI SUZUKI Dzire VXI | TN75AL3691 | 6,83,948 | 68,395 | 20,000 | 48,395 |
| 6 | Rajakumar Shylus | MARUTI VITARA Brezza ZDI+ | TN75AL2244 | 9,97,498 | 99,750 | 20,000 | 79,750 |
| 7 | White Field George Benjamin | MAHINDRA Marazzo 7 STR M2 | TN75AL2562 | 9,99,900 | 99,990 | 20,000 | 79,990 |
| 8 | K.V.Sajin | ISUZU D-MAX Crew HR (4JA1) | TN75AL0006 | 9,35,379 | 93,537 | 20,000 | 73,537 |
| 9 | P.Jenifa | VOLSWAGEN Ameo | TN75AL1935 | 5,89,000 | 58,900 | 45,000 | 13,900 |
| 10 | R.L.Ajin | VOLSWAGEN Ameo | TN75AK7810 | 5,59,500 | 55,950 | 22,643 | 33,307 |
| 11 | P.Berdhisha | VOLSWAGEN Ameo | TN75AJ4871 | 5,99,000 | 59,900 | 20,000 | 39,900 |
| | | | | **Total** | **Rs.11,94,362** | **Rs.3,05,643** | **Rs.8,88,719** |

மேலும் வாகன உரிமையாளர்களிடமிருந்து சேகரித்த தகவல்களின் படி வாகன உரிமையாளர்களிடமிருந்து மேற்படி வாகனங்களுக்கான முழுமையான ஆயுள்வரி தொகை (மேற்படி அட்டவணையில் Actual Tax in Rs. என்ற தலைப்பின் கீழ் உள்ள கட்டணம்) வசூலிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே குற்ற அலுவலர்கள்-1 மற்றும் 2 ஆகியோர்கள் கூட்டாக சேர்ந்து 120-B, 167, 466, 467, 477-A, 409 உ/இ 34 IPC மற்றும் 13(2) உ/இ 13(1)(a) of the P.C Act 1988 (Amended Act 16/2018)-ன் படியும் தவறிழைத்ததற்கான முதல் நோக்கு வழக்கிற்கான ஆதாரம் உள்ளது. மேலும் இவ்வழக்கில் மேற்கூறிய காலகட்டத்தில், மேற்குறிப்பிட்ட 11 வாகனங்களை தவிர மேலும்

ஏராளமான வாகன பதிவுகளில், இதுபோன்ற முறையில் கையாடல் மூலம் அரசுக்கு கூடுதல் நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. எனவே கையாடல் மூலம் அரசுக்கு ஏற்பட்ட நிதியிழப்பை கணக்கிடவும், இதர விசாரணைகள் மேற்கொள்ளவும் இன்று 15.11.2021-ம் தேதி 14.00 மணிக்கு மார்ஜினில் கண்ட எதிரிகள் மீது கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 9/2021 சட்ட பிரிவுகள் 120-B, 167, 466, 467, 477-A, 409 உ/இ 34 IPC மற்றும் 13(2) உ/இ 13 (1) (a) of the P.C Act 1988 (Amended Act 16/2018)-ன் படி முறையாக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்களுக்கும், முதல் தகவல் அறிக்கையின் விசாரணை நகலினை கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை கண்காணிப்பாளர் திரு.S.பீட்டர் பால்துரை அவர்களுக்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

Ramar P.T.
15/11/2021
V&AC, Nagercoil